**பட்டியல் வகுப்பினர் பழங்குடியினருக்கான (வன்கொடுமைதடுப்பு)**

**சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை: திரு. M. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

அமர்வு நீதிபதி பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான(வன்கொடுமை தடுப்பு)

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 83/2025**

[CNR.NO.TNTV16-000083 -2025]

தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 02/2020**

[CNR.NO.TNTJ09-000061 -2020]

| | |
|---|---|
| புகார்தாரரின் பெயர் | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>திருவாரூர் உட்கோட்ட காவல் சரகம்,<br>ஆலிவலம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 140/2016. |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | **1. சுதாகரன், வயது (38/2026) – 1 வது எதிரி**<br>த/பெ. கிருஷ்ணமூர்த்தி,<br>மெயின் ரோடு,<br>அகரவயல்,<br>திருத்துறைப்பூண்டி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம். |

| | |
|---|---|
| | **2. ராஜா, வயது (36/2026) – 2 வது எதிரி**<br>த/பெ. ராஜேந்திரன்,<br>சேந்தமங்கலம்,<br>விக்கிரபாண்டியம்,<br>திருத்துறைப்பூண்டி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**3. சசிக்குமார், வயது (47/2026)**<br>**– 3 வது எதிரி**<br>த/பெ. கிருஷ்ணமூர்த்தி,<br>மெயின்ரோடு,<br>சிதம்பரகோட்டகம்,<br>திருத்துறைப்பூண்டி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**4. கார்த்தி, வயது 33/2026**<br>**– 4 வது எதிரி**<br>த/பெ. சிதம்பரம்,<br>தெக்களேரி.<br>புழுதிகுடி அஞ்சல்,<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம். |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் விபரம் | **1, 2, 3 எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள்:**<br>ச/பி. 294(b) of IPC r/w 3(1)(r)(s) of SC/ST Act, இந்திய தண்டனை |

| | |
|---|---|
| | சட்டப்பிரிவுகள் 324 (4 counts), 506(ii) of IPC r/w 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழும்.<br><br>**4-ம் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள்**<br>ச/பி. 352 of IPC r/w 3(1)(s) of SC/ST Act-ன் கீழும். |
| எதிரிகள் காவலில் அடைக்கப்பட்ட நாள் | 4 ம் எதிரி கடந்த 31.10.2016 காவலில் அடைக்கப்பட்டுள்ளர்.<br>1 முதல் 3 எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற பிறப்பித்துள்ள உத்தரவின்படி எதிரி கடந்த 25.11.2016-ம் தேதியன்று தஞ்சாவூர் முதலாவது மாவட்ட கூடுதல் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை மனு தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளார். |
| புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட நாள் | **30.10.2016** |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | **23.01.2020** |
| பா.நா.சு.ச. பிரிவு 263- ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | **09.06.2022** |

| | | |
|---|---|---|
| பா.நா.சு.ச. பிரிவு 348-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பலவகை மனுக்கள் மற்றும் அதன் மீதான உத்தரவுகள். | -- | |
| சாட்சிகளின் பெயர்கள் | மு.வி. நாள் | கு.வி . நாள் |
| PW.1 - மாதரசன் | 21.03.2025 | இல்லை |
| PW.2 - கவியரசன் | 21.03.2025 | இல்லை |
| PW.3 - வளர்மதி | 21.03.2025 | இல்லை |
| PW.4 - சௌந்தரவேணி | 21.03.2025 | இல்லை |
| PW.5 - பாரதிராஜா | 28.08.2025 | இல்லை |
| PW.6 - ராஜேந்திரன் | 28.08.2025 | இல்லை |
| PW.7 – நாகராஜன் | 28.08.2025 | இல்லை |
| PW.8 - ஜெபராஜ் | 12.03.2026 | 12.03.2026 |
| பா.நா.சு.ச பிரிவு 351-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 26.02.2026 | |
| எதிரிகள் தலைமறைவான நாள் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | -- | |

| | |
|---|---|
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் கூற்றுக்கள் | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் தீர்மானம் | எதிரிகள் குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக**,<br>1, 2, 3 எதிரிகள் மீது ச/பி. 294(b) of IPC r/w 3(1)(r)(s) of SC/ST Act, இந்திய தண்டணை சட்டப்பிரிவுகள் 324 (4 counts), 506(ii) of IPC r/w 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழும், 4-ம் எதிரி மீது ச/பி. 352 of IPC r/w 3(1)(s) of SC/ST Act-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப் படவில்லை என்பதால், 1 முதல் 4 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து 1 முதல் 4 எதிரிகளை பா.நா.சு.ச 271-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் சி.பி. எண். 98/2017 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 ஆன பச்சைகலர் உள்ள |

| | |
|---|---|
| | பீர்பாட்டில் 3 துண்டுகளை மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் அழித்திட உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 17.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுக்காக சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு. S. மகாதேவன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. சரவணன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததன் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

## தீர்ப்புரை

### 1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:

காவல் துறையினர் இவ்வழக்கில் மேலே சொல்லியுள்ள 1 முதல் 4 எதிரிகள் அல்லாமல் 5ம் எதிரியான விக்னேஷ்வரன் (எ) விக்னேஷ் என்பவரை காண்பித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். அந்த இறுதி அறிக்கையின்படி, இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 மாதரசன் என்பவர் இந்து - தாழ்த்தப்பட்ட வகுப்பு பள்ளன் ஜாதியை சேர்ந்தவர் ஆவார். எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு அம்பலக்காரர் ஜாதியை சேர்ந்தவர்கள் ஆவார்கள். 4 மற்றும் **5-ம் எதிரியான விக்னேஷ்** ஆகியோர்கள் இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு அகமுடையார் ஜாதியை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 29.10.2016-ம் தேதி மதியம் 03.30 மணியளவில் புழுதிக்குடியை சேர்ந்த கோபால்

என்பவரை தெக்ளேரியை சேர்ந்த ஆதவன் ஏன் மன்னிப்பு கேட்கவில்லை என்று சாட்சி கவியரசன் தெக்ளேரிக்கு சென்று கார்த்தி அய்யப்பனிடம் கேட்டுள்ளதாகவும் அப்போது கார்த்தி சாட்சி 1 மற்றும் சாட்சி 2ஐ தெக்களாச்சேரிக்கு வரச்சொல்லியுள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 இருசக்கர வாகன்தில் சென்றபோது தெக்ளேரி குமார் என்பவர் வீட்டு வாசலில் 4-ம் எதிரி கார்த்தி 5-ம் எதிரி விக்னேஷ் மற்றும் ஒரு இளஞ்சிறார் ஆகியோர் அங்கு இருந்துள்ளனர் என்றும் இவர்களை பார்த்தவுடன் அங்கிருந்த வாழ்ந்துகாட்டுவோம் என்ற பிளக்ஸ் போர்டை எதற்கு வைத்திருக்காங்க என்று சொல்லி கிழித்து எறிந்துள்ளார்கள். சாட்சி 1 மேற்படி சாட்சிகளிடம் எங்களை வரச்சொல்லி விட்டு ஜாதியை சொல்லி அசிங்கமாக பேசுற என்று கேட்டதற்கு ஆத்திரம் அடைந்த 4-ம் எதிரி கார்த்தி மற்றும் ஒரு இளஞ்சிறார், 5-ம் எதிரி விக்னேஷ் 3-ம் எதிரி ஆகியோர் அ.சா.1 மாதரசனையும் அ.சா.2 கவியரசனையும், கையால் மாறி மாறி அடித்தும், அங்குள்ளவர்கள் சமாதானம் செய்தும் அதன் தொடர்ச்சியாக மாலை 4 மணியளவில் 3-ம் எதிரி 2-ம் எதிரி வாதியின் வீட்டிற்கு வந்து மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 யையும் தேடியபோது அங்கு வந்த அ.சா.3 வளர்மதியிடம் எங்க அந்த குச்சிகாரி பள்ள பசங்க அவங்களை வெளியே வரச்சொல்லு என்று திட்டியதோடு அ.சா.3-ஐ நடு நெற்றியில் பீர் பாட்டிலால் அடித்துள்ளார். தடுக்க வந்த அ.சா.4 சௌந்திரவேணியையும் நெற்றியிலும் பீர்பாட்டிலால் அடித்துள்ளார்கள். மேலும், அ.சா.1 யை மாதரசனை பீர் பாட்டிலால் தலையிலும், அ.சா.2-ன் வலது கை நடுவிரலிலும் அடித்து இரத்த காயம் ஏற்படுத்தி பின்னர் எதிரிகள் போகும்போது தெக்ளேரி பக்கம் வந்தால் உங்களை கொலை செய்துவிடுவோம் என மிரட்டி குற்றம்

புரிந்துள்ளதாக எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு 147, 148, 294(b), 323, 324, 506(ii) இ.த,ச. r/w 3(1)(r), 3(1)(s) 3(2)(va) SC/ST (POA) Act கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென இறுதி அறிக்கையினை திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி இறுதி அறிக்கையானது தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி தஞ்சை நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண். 02/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிரிகள் தஞ்சை நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு பின்னர் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிராக கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. 1, 2, 3 எதிரிகள் மீது ச/பி. 294(b) r/w 3(1)(r)(s) of SC/ST Act, இந்திய தண்டணை சட்டப்பிரிவுகள் 324 (4 counts), 506(ii) r/w 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழும், 4 மற்றும் 5 எதிரிகள் மீது ச/பி. 352 r/w 3(1)(s) of SC/ST Act-ன் கீழும் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது 1 முதல் 5 எதிரிகள் குற்றசாட்டுகளை மறுத்துள்ளனர். இதனை தொடர்ந்து அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக மேற்படி தஞ்சைநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதனை தொடர்ந்து தஞ்சை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த போது அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த வழக்கு தஞ்சை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது திருவாரூர் மாவட்டத்தில் புதிதாக பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான இந்த புதிய நீதிமன்றம் கடந்த 19.07.2025 ம் தேதியன்று உருவாக்கப்பட்டதை தொடர்ந்தும், இவ்வழக்கு நிகழ்வானது இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் நடைபெற்றுள்ளது என்பதாலும் மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, மேற்படி இவ்வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு வந்தவுடன் 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிராக புதிதாக வழக்கு எண் SSC No. 83/2025 கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நிலையில், இவ்வழக்கில் உள்ள 5-ம் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்த காரணத்தினால் அவருக்கு எதிராக பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு பிடிக்கட்டளை நிறைவேற்றப்படாமல் இருந்து வந்துள்ளது. இதனால் 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் தலைமறைவாக உள்ள 5-ம் எதிரி மீதான வழக்கை பிரித்து விட்டு தங்கள் மீதான வழக்கை மட்டும் நடத்த வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் மனு அனுமதிக்கப்பட்டு தலைமறைவாக இருந்து வந்த 5-ம் எதிரியான விக்னேஷ்வரன் என்கிற விக்னேஷ் என்பவரது வழக்கு இந்த வழக்கிலிருந்து பிடிக்கப்பட்டு மேற்படி 5-ம் எதிரியினை பொறுத்து புதிய வழக்கு எண். SSC No.05/2026 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு எஞ்சியுள்ள 1 முதல் 4 எதிரிகளான இவ்வழக்கில் உள்ள எதிரிகளை பொறுத்து இவ்வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இந்த நீதிமன்றத்திற்கு வந்தவுடன் அரசுத்தரப்பில்

எஞ்சியுள்ள சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் மொத்தம் அரசு தரப்பில் அ.சா-1 முதல் அ.சா-8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-23 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாராம்சம்**:

**(i).** **அ.சா-1 மாதரசன்** அவரது அண்ணன் **அ.சா-2 கவியரசன்** அ.சா-1, அ.சா.2 ஆகியோர்களின் தாயார் **அ.சா-3 வளர்மதி**. அ.சா-1, அ.சா-2 ஆகியோர்களின் சகோதரியும், அ.சா.3-ன் மகளுமான **அ.சா-4 சௌந்தரவேணி** ஆகியோர்கள் தங்களது சாட்சியங்களில் சம்பவ தேதியன்று அ.சா-3 மற்றும் அ.சா.-4 ஆகியோர்கள் வீட்டில் இருக்கும்போது யாரோ வந்து தாக்கியுள்ளார்கள் யார் தாக்கினார்கள் என்று இவர்களுக்கு தெரியாத நிலையில் எதிரிகளின் தூண்டுதலின் பேரில் இவ்வாறு நடந்திருக்கும் என்ற சந்தேகத்தின் பேரில் அ.சா-1 போலிசாரிடம் தகவல் அளித்துள்ளார். பின்னர் போலிசார் எழுதாத பேப்பரில் கையெழுத்து போடச்சொன்ன காரணத்தினால் அ.சா-1 கையொப்பம் போட்டுக்கொடுத்துள்ளார்.

**(ii).** **அ.சா.-5 பாரதிராஜா**, **அ.சா.-6 ராஜேந்திரன்**, **அ.சா.7 நாகராஜன்** ஆகியோர்கள் தங்களுக்கு வழக்கின் விபரங்கள் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளனர்.

**(iii). <u>அ.சா.8 ஜெபராஜ்</u>** இவர் திருவாரூர் மாவட்ட ஆலிவலம் உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 30.10.2016 ம் தேதி ஆலிவலம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக இருந்த ரவிச்சந்திரன் என்பவருக்கு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த அ.சா-1 மாதரசன் என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த அ.சா.ஆ.2 ஆன புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்து அதன் அடிப்படையில் ஆய்வாளர் ரவிச்சந்திரன் நிலையம் வந்து அ.சா.ஆ.3 ஆன நிலைய குற்ற எண். 140/2016-ல், இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) of IPC உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC/ST (PoA) Act கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ளார்.

**(iv)** அ.சா.8 மேலும் தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த கண்ணதாசன் என்பவரை புலன் விசாரணை செய்ய வேண்டுமென அ.சா.ஆ.4 ஆன அலுவலக நடவடிக்கை C.No.89/SJ&HR/TVR/2016, Dated:30.10.2016-ன் கீழ் உத்தரவிட்டிருந்தார் என்றும், அதன்பேரில் காவல் துணை கண்காணிப்பாளர் கண்ணதாசன் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று அ.சா-1 முதல் அ.சா-4 மற்றும் அ.சா-6, அ.சா-7 ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் 30.10.2016 ஆம் தேதி சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை அ.சா.ஆ.5

பார்வையிட்டு பார்வை மகஜர் ஒன்றும், அ.சா.ஆ.6 மாதிரி வரைபடமும் தயார் செய்து, மேற்படி சாட்சிகள் முன்பு உடைந்த நிலையில் இருந்த சா.பொ.1 ஆன பச்சை கலர் உள்ள பீர் பாட்டில் 3 துண்டகளை அ.சா.ஆ.7 ஆன மகஜர் தயார் செய்து கைப்பற்றி மேற்படி சா.பொ-1 யை அ.சா.ஆ.8 ஆன படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், மேலும் மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் கண்ணதாசன் கடந்த 31.10.2016 தேதி 8.00 மணியளவில் ராயநல்லூர் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்த 4 ம் எதிரி கார்த்தி என்பவரை கைது செய்தபோது 4-ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், இவ்வழக்கில் 1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் தஞ்சையிலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

(v) மேலும் அ.சா-8 ன் சாட்சியத்தின் படி கடந்த 17.04.2017 ம் தேதி அன்று திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த தன்னை புலன் விசாரணை ய்ய வேண்டுமென அ.சா.ஆ.9 ஆன அலுவலக நடவடிக்கையின் கீழ் உத்தரவிட்டுள்ளார். அதனை தொடர்ந்து இந்த அ.சா.8 புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகளுக்குரிய அ.சா.ஆ- 10 முதல் 14 சாதிசான்றிதழ்களையும், அ.சா-1 மாதரசன் என்பவர் தாழ்த்தப்பட்ட இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவர் என்பதற்கான அ.சா.ஆ.15 ஆன சாதிசான்றிதழ் பெற்றுள்ளார். பின்னர் காயம் பட்ட அ.சா-1 முதல் அ.சா-4 ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த

திருத்துறைப்பூண்டி மருத்துவர்களை விசாரணை செய்து அ.சா-1 முதல் அ.சா-4 வரையானவர்களுக்கு அ.சா.ஆ- 16 முதல் 19 வரையிலான விபத்து பதிவேட்டினை பெற்று பின்னர் அ.சா-1 முதல் அ.சா-4 வரையானவர்கள் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதன் காரணமாக அவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை விசாரணை செய்து அ.சா-1 முதல் அ.சா-4 வரையானவர்களுக்கு அ.சா.ஆ-20 முதல் 23 காயச்சான்றிதழ் பெற்று, பின்னர் இவ்வழக்கில் உள்ள சட்ப்பிரிவுகளை மாற்றி அ.சா.ஆ.24 ஆன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து புலன் விசாரணையை முடித்து கடந்த 14.11.2017 அன்று இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**6**. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சியங்கள் முடிந்தவுடன் அரசுத்தரப்பு சாட்சியங்கள் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள விஷயங்களைப் பொறுத்து பா.நா.சு.ச பிரிவு 351(1)(b) -ன் கீழ் சொல்லப்பட்டுள்ளவாறு எடுத்துக்கூறி வினவியபோது 1 முதல் 4 எதிரிகள் மேற்படி சாட்சியங்களை பொய் சாட்சியங்கள் என்று கூறியுள்ளனர். பின்னர், எதிரிகள் தங்கள் தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

**7.** இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசுத்தரப்பில் 1, 2, 3 எதிரிகள் மீது ச/பி. 294(b) of IPC r/w 3(1)(r)(s) of SC/ST Act, இந்திய தண்டணை சட்டப்பிரிவுகள் 324 (4 counts), 506(ii) of IPC r/w 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழும், 4-ம் எதிரி மீது ச/பி. 352 of IPC r/w 3(1)(s) of SC/ST Act ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

**8.** இரு தரப்பு வாதங்களும் நன்கு கேட்கப்பட்டது. சாட்சி சான்றாவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**9.** **<u>தீர்வு:-</u>**

இவ்வழக்கில் அரசுத்தரப்பு கூற்றின்படி பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் நபர்களாக அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இந்த அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் போது தங்களை யார் தாக்கியது என்று தெரியாது என்று கூறியுள்ளார்கள். இவ்வழக்கில் அ.சா.5 முதல் 7 வரையிலான சாட்சியங்கள் இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று கூறியுள்ளனர். இவ்வாறான நிலையில், அ.சா.8 ஆன காவல் துணை கண்காணிப்பாளர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறும் சாட்சியத்தின் அடிப்படையில் இந்த எதிரிகள் குற்றம் இழைத்துள்ளார்கள் என முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.** **முடிவாக**, 1, 2, 3 எதிரிகள் மீது ச/பி. 294(b) of IPC r/w 3(1)(r)(s) of SC/ST Act, இந்திய தண்டணை சட்டப்பிரிவுகள் 324 (4 counts), 506(ii) of IPC r/w 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழும், 4-ம் எதிரி மீது ச/பி. 352 of IPC r/w 3(1)(s) of SC/ST Act-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப் படவில்லை என்பதால், 1 முதல் 4 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து 1 முதல் 4 எதிரிகளை பா.நா.சு.ச 271-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் சி.பி. எண். 98/2017 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 ஆன பச்சைகலர் உள்ள பீர்பாட்டில் 3 துண்டுகளை இவ்வழக்கில் இருந்து பிரிக்கப்பட்டுள்ள மற்றொரு வழக்கான S.S.C. No 5/2026 நிலுவையில் உள்ளதால் மேற்படி வழக்கு முடியும் வரையில் பாதுகாப்பாக வைக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 -ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.18 19:32:29 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

<u>**அரசுத்தரப்பு சாட்சிகள்**</u>

| | |
|---|---|
| அ.சா.1 | மாதரசன் |
| அ.சா.2 | கவியரசன் |
| அ.சா.3 | வளர்மதி |
| அ.சா.4 | சௌந்தரவேணி |
| அ.சா.5 | பாரதிராஜா |

அ.சா.6 ராஜேந்திரன்

அ.சா.7 நாகராஜன்

அ.சா.8 ஜெபராஜ் - காவல்துணை கண்காணிப்பாளர்

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | திருவாரூர் காவல் கண்காணிப்பாளர் உத்தரவு |
| அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.8 | படிவம் எண்.91 |
| அ.சா.ஆ.9 | காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவு |
| அ.சா.ஆ.10 | 1-ம் எதிரியின் சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ.11 | 2-ம் எதிரியின் சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ.12 | 3-ம் எதிரியின் சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ.13 | 4-ம் எதிரியின் சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ.14 | 5-ம் எதிரியின் சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ.15 | அ.சா.1-ம் சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ.16 | அ.சா.1 மாதரசன் விபத்து பதிவேடு |

| | |
|---|---|
| அ.சா.ஆ.17 | அ.சா.2 கவியரசன் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.18 | அ.சா.3 வளர்மதி விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.19 | அ.சா.4 சௌந்தரவேணி விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.20 | அ.சா.1 மாதரசன் காயச்சான்று |
| அ.சா.ஆ.21 | அ.சா.2 கவியரசன் காயச்சான்று |
| அ.சா.ஆ.22 | அ.சா.3 வளர்மதி காயச்சான்று |
| அ.சா.ஆ.23 | அ.சா.4 சௌந்தரவேணி காயச்சான்று |

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருள்.**

சா.பொ.1 பீர்பாட்டில் துண்டுகள் 3

**எதிரிகள் தரப்பு சாட்சி , சான்றவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:-**

-இல்லை-

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.18 19:32:38 +0530

அமர்வு நீதிபதி,

பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு)

வழக்குகளை விசாரிப்பதற்கான

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.